## வடலூர் நகராட்சி

வடலூர் நகராட்சி 2023– ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30–ம் தேதி திங்கள்கிழமை காலை 10.00 மணிக்கு சாதரணக் கூட்டம் வடலூர் நகராட்சி "**நகர் மன்ற கூட்ட அரங்கில்**" **நகர்மன்ற தலைவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

நகர்மன்ற தலைவர்

வடலூர் நகராட்சி.

**மன்றப்பொருள் எண்: 1**

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2023 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மன்றப்பொருள் எண்: 2**

இந்நகராட்சியில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி திட்டம் (I & A) 2022–2023 ன் கீழ் பழைய பேருந்து நிலையத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் புதிய பேருந்து நிலைய விரிவாக்கத்தற்கு இடையூராக உள்ள நகராட்சி அலுவலக வளாகத்தில் கிழக்கு பகுதியில் கீழ்கண்ட விபரப்படி மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி புதிய பேருந்து நிலைய கட்டுமான மேற்கொள்ள மன்றத்தின் பார்ரவைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மரங்கள் விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | அசோக்கா மரங்கள் | 5 |
| 2 | தென்னை மரங்கள் | 4 |
| 3 | பாக்கு மரங்கள் | 3 |
| 4 | வேப்ப மரங்கள் | 3 |
| 5 | பாக்ஸ் டெல் மரங்கள் | 2 |
| | **மொத்தம்** | **17** |

<u>அலுவலக குறிப்பு : 1.</u> மன்றம் அனுமதிக்கலாம்,
**கோப்பு எண்.37/2023/இ1**

**மன்றப்பொருள் எண்: 3**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 27 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022 – 23 திட்டத்தின் கீழ் 06 எண்ணிக்கையில் இலகுரக வாகனங்கள் (LCV) Vee Vee Motors திருவாரூர் நிருவனத்தாரால் சப்ளை செய்யப்பட்டுள்ளது. அவ்வாகனங்களை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்ய கீழ்கண்ட விபரப்படி கட்டணம் செலுத்த கோரி பட்டியல் ரூ.3,17,058/- Vee Vee Motors திருவாரூர் நிருவனத்தாரால் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | கட்டண விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | வாகன பதிவு கட்டணம் | 21,892 |
| 2 | வாகன காப்பீடு கட்டணம் | 24,951 |
| 3 | Refiection Stiker | 3000 |
| 4 | Number Plate | 1000 |
| 5 | Yellow Painting | 2000 |
| **மொத்தம்** | | **52843** |

எனவே, 5 வாகனங்களுக்கு மேற்படி தொகை ரூ3,17,058/– நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு: 1.</u>மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று காசோலை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 4307 /2023/இ1**

**மன்றப்பொருள் எண்: 4**

வடலூர் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட முக்கியமான மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி அரசு திட்டங்களை பொதுமக்கள் அறிந்துக்கொள்ளும் விதமாக பேனர்களை வைக்க கோரியதின் பேரில் பகுதிசபா பேர், Fun Street , நெய்தல் ல்பத்தக கண்காட்சி, மகளிர் உரிமை தொகை வழங்கியது பேனர் , டெங்கு விழிப்புணர்வு பேனர்

மற்றும் விழிப்புணர்வு சம்மந்தமாக ஆலோசணை கூட்டம் மேற்கொண்ட செலவினம் ரூ.33,900/-க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு காசோலை வழங்கியதை மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தொகைக்கான காசோலை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.4212 /2023/எச்1**

**மன்றப்பொருள் எண்: 5**

வடலூர் நகராட்சியில் ஊக்க நிதி (SFC Incebtive Fund) 2023–2024 நிதியின் கீழ் மழைநீர் வடிகால் பணி (Strom Water Drain With RCC Culver) மற்றும் வடலூர் to விருத்தாசலம் செல்லும் வாலையில் சத்திய ஞான சபை அருகில் மின்விளக்கு (Ormananetal Light) அமைக்கும் பணிக்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் விளம்பரம் செய்ய இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை செய்தி மலர் அலுவலர், தலைமை செயலகம் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் 15.08.2023 அன்று கீழ்கண்ட விவரப்படி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது.

| வ.எண் | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | Deccon Chrnicle | 33264 |
| 2 | தினமணி நாளிதழ் | 3600 |
| 3 | CGST | 1731 |
| 4 | SGST | 1731 |
| மொத்தம் | | 72727 |

எனவே, மேற்படி தொகை ரூ.72727/- நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று காசோலை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.809/2023/இ1.

**மன்றப்பொருள் எண்: 6**

இந்நகராட்சியில் பொதுசுகாதாப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் தளவாட பொருட்கள் தேவைப்படுவதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.5,00,000/-க்கும் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் அனுமதியை எதிர்நோக்கி பொருட்கள் விநியோகம் செய்ய அந்நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார நலன் கருதியும் , அவசர அவசியம் கருதியும் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண்.4178/2023/எச்1.

**மன்றப்பொருள் எண்: 7**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் டெங்கு நோய் தொற்று அதிகமாக காணப்படுவதால் ஏற்கனவே, வாங்கி உபயோகப்படுத்தப்பட்ட கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பழுது நீக்கம் செய்தும் பயன்படுத்த முடியாமல் இருப்பதால், புதியதாக Pulse Fogging Machine – 4, பெரிய வகை கொசு ஒழிப்பு புகை அடிக்கும் இயந்திரம் வாங்குவதற்கு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வ் திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்தில் வாங்குவதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார நலன் கருதியும் , பொது மக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் முன்னிட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண்.4179/2023/எச்1.

**மன்றப்பொருள் எண்: 8**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் , ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு 2023 – 2024 ம் ஆண்டிற்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீருடை கோ–ஆப்டெக்ஸ் கடலூர் அவர்களிடமிருந்து வாங்கி வழங்கிடவும் அதற்கான தையல் கூலி வழங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/- மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண்.4310/2023/எச்1.

**மன்றப்பொருள் எண்: 9**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 27 வர்டுகளில் பிறப்பு மற்றும் இறப்பு விவரங்களை பதிவு செய்யப்படும் படிவங்கள் மாதம் வாரியாக தனி தனியாக உள்ளதை 2020 முதல் 2023 ஆண்டு வரை வருட வாரியாக பைன்டிங் செய்ய ஆகும் தோராய செலவீனம் ரூ.20,000/- (இருபது ஆயிரம் மட்டும்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோப்பு எண். /2023/**

**மன்றப்பொருள் எண்: 10**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் சுகாதாரப்பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN31 H8721 (407) வாகனத்திற்கு தகுதி சான்று 2023 – 2024ம் ஆண்டிற்கு வாங்குவதற்கு வாகனத்தின் பழுதுகளை சரிசெய்திட , வாகனத்தின் பழுதுகள் குறித்து , வாகனத்தினை நேராய்வு செய்து மெக்கானிக் மூலம் விலைவிவரப்பட்டியல் துப்புரவு பணி மேற்பார்வையாளர் மூலம் சமர்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து வாகனத்தின் பழுதுகளை சரிசெய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.2.00.000/-(ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரப் பணிக்கு குப்பைகளை அகற்ற வாகனம் உடனடியாக தேவைப்படுவதால் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.4041 /2023/எச்1**

**மன்றப்பொருள் எண்: 11**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 31 H 8721(407) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 05.10.2023ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஓம்சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் அரசு அங்கீராம் பெற்ற நிறுவனம் D.S.N நகர், நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, கடலூர். | ரூ. 199538/- |
| 2. | விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ் No.56, Sidco Indistrial Estate செம்மண்டலம், கடலூர். | ரூ. 203727/- |
| 3. | விநாயகா ஆட்டோ கரேஜ் எண்.3, ஜெயராம் நகர், கடலூர். | ரூ. 210158/- |

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் D.S.N நகர், நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, கடலூர் என்ற நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4041/2023/இ1**
**கோப்பு எண். /2023/**

**மன்றப்பொருள் எண்: 12**

இந்நகராட்சியில் ஊக்க நிதி (SFC Incentive Fund) 2023 – 24 திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ 4.26 இலட்சத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு அனுமதி வழங்கி உள்ளதற்கு இணங்க 21.09.2023.ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் கடலூர் | 4,17,79,617/– | – 0.27%(குறைவு) |
| 2 | M/S சாய் சக்தி & கோ சேலம் | 4,23,5,4914/– | – + 1.11% (அதிகம்) |

<u>அலுவலக குறிப்பு</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட – 0.27% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**கோப்பு எண். 809 /2023/இ1**

**மன்றப்பொருள் எண்: 13**

துணை இயக்குநர் சுகாதாரப்பணி கடலூர் அவர்களின் உத்திரவின் பேரிலும் , மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் 23.06.2023 அன்று தொலைபேசி மூலம் ஆணையரிடம் வாய்மொழி உத்திரவில் குள்ளஞ்சாவடி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பல்நோக்கு சிறப்பு முகாமிற்கு தற்காலிக கழிப்பறை அமைத்து தர கோரியதின் பேரில் 6 எண்ணிக்கை GLOOBAL SANITAS SERVICES CHENNAI – 77 என்ற நிறுவனத்தின் மூலம் வரவழைக்கப்பட்டு பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டது. நேரடி உத்திரவு என்பதாலும் பொது மக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் பணிக்கு 6x4=24,000/- போக்குவரத்து வண்டி வாடகை ரூ.21,000/- மொத்தம் ரூ.45,000/-யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிதற்கும் நகராட்சி சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் உடனடியாக பணிமேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்களின் அவசர அவசியம் கருதியும் பொது சுகாதார பணி என்பதாலும் நகராட்சி சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி அனுமதி வேண்டப்படுகிறது.

**கோப்பு எண். 867/2023/எச்1**

**மன்றப்பொருள் எண்: 14**

மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம், அவர்களின் கடித ந.க.எண்.7939/2022/சி1, நாள்.21.09.2022ல் தொலை தொடர்பு சேவை வழங்கும் நிருவனங்களிடமிருந்து வரப்படும் விண்ணப்பம் மீது கள ஆய்வு மேற்கொண்டும் ஆவணங்களை பரிசிலித்தும் உரிய கட்டணத்தை வசூலித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி வடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் 646 இடங்களில் சாலையில் துளையிட்டு வான்வழி கம்பங்கள் (Arial Poles) பதிக்கும் பணிக்கு ஜியோ டிஜிட்டல் பைபர் பிரைவேட் லிட் நிறுவனம்அனுமதி கோரப்பட்டுள்ளது. எனவே, இப்பணி தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்டதில் சாலைகளில் ஏற்படும் சேதாரங்களை சீரமைப்பதற்கு செலுத்த ஜியோ டிஜிட்டல் பைபர் பிரைவேட் லிட் நிறுவனத்திற்கு கேட்பு அறிவிப்பு வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3073/2023/இ1

**மன்றப்பொருள் எண்: 15**

இந்நகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னச்சரிக்கை நடவடிக்கையாக தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெறியேற்ற தேவையான ஆயில் இன்ஜின் , மரம் அறுக்கும் இயந்திரம் வாங்கம் பணி, மின் தடை காலங்களில் மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றும் மின் உந்திகளை சரி செய்யவும் மற்றும் வாடகைக்கு அமர்த்தவும் , தாழ்வான பகுதிகளில் WMM நிரப்புதல், குடியிருப்புகளில் தேங்கும் மழைநீரை அகற்ற JCB மூலம் பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.988/2023/இ1

**நகர்மன்ற தலைவர்**
**வடலூர் நகராட்சி**

<u>வடலூர் நகராட்சி</u>

***<u>மன்றக் கூட்ட அழைப்பிதழ்</u>***

**************

**2023 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30– 10–2023 திங்கள் கிழமை பிற்பகல் 10.00 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி.**